# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

அடிமன அவலங்கள்



www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 4. அடிமன அவலங்கள்

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்து ஒழுகும் ஒழுக்கத்தைக் களவு என்பார் தொல்காப்பியர். ஒருவன் பெற்றெடுத்த பெண் ஒருத்தியைப் பெற்றோருக்குத் தெரியாமல் தனக்காக்கிக் கொள்ள முனைவது ஒருவகையில் களவுதாமே. பிறன்பொருளைக் கள்வத்தால் கள்வேம் எனல், தீது என்கிறார் திருவள்ளுவர். பெற்றோர் பார்த்து நடத்தும் திருமணத்தை விட, காதலர் தாமே விரும்பி, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு மணப்பதற்கே அக நூல்கள் முதல் மரியாதை தருகின்றன. கொடுப்பதற்கென்றே வைத்திருந்த பொருளைத் தகுதி உடையான் ஒருவன் எடுத்துக் கொள்வதால், கற்பில் நிறைகிற களவு, உலகியல் களவிலிருந்து வேறுபட்டு, அக ஒழுக்கமாக ஏற்கப்படுகிறது.

---

*பெற்றோர் பார்த்து நடத்தும் திருமணத்தை விட, காதலர் தாமே விரும்பி, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு மணப்பதற்கே அக நூல்கள் முதல் மரியாதை தருகின்றன.*

---

காதலைப் பலர் லேசாகக் கருதுகின்றனர். காதலிப்பதும், காதலைக் கொண்டு செலுத்துவதும், காதலித்தவரையே மணப்பதும் எளிய செயல்கள் ஆகமாட்டா. இன்றைய சமூகம் காதலைச் சித்திரிப்பதாகக் காட்டிக்கொண்டு அதனைக் கீழ்மைப்படுத்துகிறது.



www.saivamonline.com

என்றைக்குமே காதலுக்குச் சமூகம் மறுப்புக் காட்டியே வந்திருக்கிறது. அது, காதல் மீது கொண்ட வெறுப்பால் வந்ததன்று. காதல் கொள்வார் மீது கொண்ட அவநம்பிக்கையால் வந்தது. காதலைக் களவு என்று சுட்டியதன் மூலம், எக்காலத்திலும் சமூகம், காதலுக்கு அங்கீகாரம் வழங்க இசைந்திருக்கவில்லை என்றே உணர முடிகிறது. காதலர்கள் காதல் மணம் விரும்புகின்றனர். பெற்றோரோ, பிள்ளைகள் வாழ்வு குறித்த அச்சத்தால் மரபு வழி மணத்தையே போற்றுகின்றனர்.

---

***என்றைக்குமே காதலுக்குச் சமூகம் மறுப்புக் காட்டியே வந்திருக்கிறது. அது, காதல் மீது கொண்ட வெறுப்பால் வந்ததன்று. காதல் கொள்வார் மீது கொண்ட அவநம்பிக்கையால் வந்தது.***

***அவலங்களுக்கான மூல காரணங்கள் பல உள்ளன. என்றாலும், களவில் காதலுக்கு எதிர்ப்புக் காட்டும் சமூக அமைப்பும், கற்பில் ஆடவனின் பரத்தமையுமே காரணங்களாக அமைகின்றன.***

---

களவிலும், கற்பிலும் காதலர்களுக்கு இன்பமும் உண்டு. துன்பமும் உண்டு. பலரும் இன்பத்திலும் துன்பமே மிகுதி எனச் சாதிக்கின்றனர். இது அவரவர் வாழ்வில் வைத்தே தீர்மானிக்கப்பட வேண்டும். பொது மதிப்பீடு என்று ஒன்றும் இருத்தல் இயலாது. சங்க இலக்கியச் சித்திரிப்புக்களில் காதலுக்கு இடையூறு செய்யும் எதிர்முனைப் பாத்திரங்கள் இல்லை. தந்தையும் தனையனும் சீறுவது கூட, ஒரு எல்லையில் நிற்கும். அவர்களுக்குத் தலைவனுடனோ, தலைவியுடனோ நேரடி மோதல் என்ற சித்திரிப்புகள் ஒன்றும் இல்லை. என்றபோதும், காதலன், காதலி இருவருக்கும் உளதாகும் அடிமன அவலங்களுக்கு அக இலக்கியங்களில் குறைவே இல்லை. அவலங்களுக்கான மூல காரணங்கள் பல உள்ளன. என்றாலும், களவில் காதலுக்கு எதிர்ப்புக் காட்டும் சமூக அமைப்பும், கற்பில் ஆடவனின் பரத்தமையுமே காரணங்களாக அமைகின்றன.

காதலர் அடிமன அவலங்களைப் பதிவு செய்வதில் குறுந்தொகைக்கே முதலிடம் தருதல் வேண்டும். களவுக்கு மேலெல்லை இரண்டு மாதங்கள் மட்டுமே என்கின்றன அக இலக்கண நூல்கள். அறுபது நாள் களவு வாழ்க்கைக்குள், காதலர் கொள்ளும் அவலங்கள் தாம் எத்தனை? எத்தனை? அவை எவ்வகையன? எவற்றால் வந்தன? யார் யார் மூல காரணர்கள்? அவலங்கள் உண்மையிலேயே



www.saivamonline.com

துன்பங்கள்தாமா? அளவற்ற அன்பிலும், எதிர்பார்ப்பிலும் மேலெழுந்து தோன்றுவனவா என்பதை இனங்காட்ட அழகிய குறுந்தொகைகளைத் துணை கொண்டேன். அவலச் சித்திரிப்புக்களிலும் ஓர் அழகுண்டு. ஆற்றாமை மீதுரலிலும் ஓர் அன்பு இழையோடும் என்பதை உணர முடிந்தது. படித்தால், அவலம் கலவாத ஒரு வாழ்வு அமைய, நம்மை நாம் காவல் செய்து கொள்ளலாம் அல்லவா?

---

*அவலச் சித்திரிப்புக்களிலும் ஓர் அழகுண்டு. ஆற்றாமை மீதுரலிலும் ஓர் அன்பு இழையோடும் என்பதை உணர முடிந்தது.*

*காதல் இலக்கியம் படைத்த சங்கச் சான்றோர்கள் பலரும், அகவாழ்வை முழுவதும் இன்பம் நிறைந்ததாகப் படைத்திலர். களவு மற்றும் கற்பு வாழ்வில், இன்பத்தோடு துன்பமும் உண்டு என்று அவர்கள் எச்சரிக்கத் தவறவில்லை.*

---

சங்ககால அக இலக்கியச் சித்திரிப்புக்கள், பெருமளவு நாடக வழக்கும், சிறிதளவு உலகியல் வழக்கும் கலந்தனவாகவே அமைந்துள்ளன. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் என்று தொடங்கும் தொல்காப்பிய நூற்பா இதனை உறுதி செய்கிறது. உரையாசிரியர் பலருக்கும் இக்கருத்தே உடன்பாடு என்னும், காதல் இலக்கியம் படைத்த சங்கச் சான்றோர்கள் பலரும், அகவாழ்வை முழுவதும் இன்பம் நிறைந்ததாகப் படைத்திலர். களவு மற்றும் கற்பு வாழ்வில், இன்பத்தோடு துன்பமும் உண்டு என்று அவர்கள் எச்சரிக்கத் தவறவில்லை. எனவே, காதல் வயப்படும் தலைவன் தலைவி மட்டுமன்றி அவர்களைச் சார்ந்தொழுகும் பாத்திரங்களும் பல மனத் துன்பங்களுக்கு ஆட்படுகின்றன. கடைச்சங்க கால அக இலக்கியங்களுள் ஒன்றாகிய குறுந்தொகையில் காணப்படும், அடிமன அவல உணர்வுகளை வேறு பிரித்து இனங்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பரணரின் அழகிய பாடல் ஒன்று, தலைமகனது அடிமன அவலத்தை இனங்காட்டி அமைந்துள்ளது. அல்ல குறிப்பட்டு மீளும் தலைவன் ஒருவன், தன் நெஞ்சுக்கு உணர்த்துவதாக அமைந்த இப்பாடலில், அவனது தன்னிரக்கம் சுட்டப்பட்டுள்ளது. தலைவி இல்லம் [illegible] தலைவன், முன்னரே திட்டமிட்டவாறு, தன் [illegible] முகச் செயல் ஒன்றால் அறிவித்தான். குறித்தவாறு தலைவி அங்கே தோன்றவில்லை. காரணம் தலைவன் வருவதற்கு [illegible] குறித்திருந்த [illegible] முகச் செயல் ஒன்று தன்னியலாக



www.saivamonline.com

நிகழ, தலைவி குறியிடம் சேர்கிறாள். தலைவனைக் காணாது வருந்தித் திரும்புகிறாள். மெய்யாகத் தலைவன் நிகழ்த்திய குறியீட்டைப் பொய் என்று கருதித் தலைமகள் வாராது ஒழிகிறாள். இதனால் பெரிதும் மனம் நொந்து வருந்திய தலைமகன் தன் நெஞ்சொடு பேசுகிறான். அடிமன அவலம் அங்கே பதிவாகிறது.

பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை என்பார் வள்ளுவர். தலைமகளை அடைந்துவிட வேண்டும் என்ற தன் விருப்பம் நிறைவேறாது, அல்ல குறிப்பட்ட தலைவன், பொருள் அற்றவன் இன்பத்தை விழைந்தது போல் ஆயிற்று என் நிலை என்று நொந்து கொள்கிறான். என் நெஞ்சே, நம் காதலி நல்லவள் என்று நீ அன்பு செய்தாய்; ஆனால் அவள், நமக்கு எளிதில் கிடைத்தற்கு அரியவள் என்பதை உணர மறந்தாய். எளிதாய் எண்ணிய நினக்கு இத்துன்பம் வேண்டத்தக்கதே என உரைப்பானாய்த் தலைவன் தன் மன அவலத்தை இங்கே புலப்படுத்துகின்றான்.

*இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு*
*அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி*
*நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு*
*அரியள் ஆகுதல் அறியா தோயே* (கு.தொ:120)

என்பது பரணரின் அழகிய கவிதை.

தலைவன் பொருள் வயின் பிரிய முனைந்த காலை, தலைமகள் தானும் உடன் வரும் குறிப்பை வெளிப்படுத்துகிறாள். பாலை நிலக் கடுமையையும், அவற்றைத் தாங்கும் ஆற்றலற்ற தலைவி மென்மையையும் உணர்ந்திருந்த தலைவன் மறுத்து விடுகின்றான். உடன் அழைத்துப் போகாமை குறித்துக் கண்ணீர் விட்ட தலைவி நினைவோடு, பாலை வழியில் பயணிக்கும் தலைவன் நீள நினைக்கிறான். பாலைப் பாதையில், பருகும் தண்ணீரும் கிடைத்தல் அரிது. விலங்குகளை வேட்டையாடும் செந்நாய்கள், தம் கால்களால் எற்றித் தோண்டிய ஊற்றுக்களில் சிறிதாகத் தண்ணீர் காணப்படுகிறது. அதன் மீதும் காட்டு மல்லி இலைகளும் பூக்களும் வீழ்ந்து கிடந்தமையால் தண்ணீர் கெட்டு அழுகல் நாற்றம் வீசுகிறது. தாகம் வந்தால் தலைவன் வேறு வழியின்றி, அவ்வழுக்கு நீரையே பருக வேண்டியிருக்கும். அவ்வாறு பருகியபோது தலைவியை நினைக்கிறான். அவள் வந்திருந்தால், இந்தத் துன்பத்தைத் தாங்க இயலாது தவித்திருப்பாள். அவள் வாராமை நன்றாயிற்று என்று



www.saivamonline.com

நெஞ்ச அவலம் புலப்படுத்துகிறான்.

சிறைக்குடி ஆந்தையாரின் இப்பாலைத் திணைப் பாடல் தலைவியை உடன் அழைத்து வாராமையைச் சரியான முடிவே எனத் தன் நெஞ்சிற்கு நியாயப்படுத்தி உரைப்பதாக அமைகிறது.

*வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்*
*குளவி மொய்த்த அழுகற் சின்னீர்*
*வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர்*
*வருகதில் அம்ம , தானே*
*அளியளோ அளியள் என்நெஞ்சு அமர்ந்தோளே* (கு.தொ:56)

என் பிரிவுக்கு அவள் ஆற்றாளாயினும், யான் பெறும் துன்பத்தை அவள் அனுபவிக்க நேராமை நன்றாயிற்று எனக் கருதும் அன்பில் தலைவன் அன்புடைமை புலப்படுகிறது.

---

***களவு, கற்பு எனும் இரு கைகோள்களிலும், பெரிதும் அவலங்களை எதிர்கொள்பவளாகவே தலைமகள், அக இலக்கியங்களில் சித்திரிக்கப்படுகிறாள். பெண்மை பற்றிய மதிப்பீடு, உரிமைக்குறைபாடு, கட்டுக் காவல்கள், ஆடவர்களின் கழிகாமம், பரத்தமைப் போக்கு, சமூகக் கட்டுப்பாடுகள், மரபுகள் என எல்லாப் புறமும் நெருக்கப்படும் இலக்கியத் தலைவிக்கு அவலங்களே எஞ்சி நிற்கின்றன.***

---

ஆண் மகன் நீ. அறிவுடையவன். மனத்தைக் கட்டுப் பாட்டுக்குள் வைக்க நீ அறிந்திருக்க வேண்டும் என்று தலைவனுக்குப் பாங்காயினார் அவனைக் கழறி உரைத்தனர். இயற்கைப் புணர்ச்சிக்குப் பின், தலைவியைக் காண இயலாது வருந்தும் தலைவனைப் பாங்கன் இடித்து உரைக்கிறான். தலைவன், என் நண்பர்களே என்னை இடித்துரைப்பதை விடுத்து என் நோயைத் தணிக்கும் வேறு செயல் உண்டாயின் கூறுங்கள் என்று வேண்டுகிறான். வெள்ளிவீதியாரின் குறிஞ்சித் திணையில் அமைந்த இந்தப் பாடல், கழற்றெதிர் மறை என்ற துறை தாங்கி வருகிறது.

தலைமகனுக்குத் தலைமகளை எய்த இயலாமையினால், காதல் நோய் பரவி உடலெங்கும் பாய்கிறது. நண்பர்கள், இது தகாது என்று இடித்துரைக்கின்றனர். தலைவன், உங்கள் உரை என் உடல் நோயைக்



www.saivamonline.com

காக்கவல்லதாயின் நன்றுதான். ஆயின், அது இனி இயல்வது ஒன்று அன்று. மலை முகட்டில் சுட்டெரிக்கும் வெய்யிலில், வெண்ணெய்த் திரள் ஒன்று பாறை மீது வைக்கப்பட்டது. அது வெப்பம் தாங்காது பாறையின் நாலா பக்கங்களும் பரந்து விரிந்தது. அதனை அவ்வாறு உருகாது பாதுகாக்கக் கருதுவான் ஒருவன் அருகில் இருந்தான். ஆயின் அவனோ, கையும் இல்லாதவன்; வாய்பேசவும் இயலாதவன். தடவி அழைத்துப்பிறரை விட்டுப் பாதுகாக்கவும் இயலாதவனாய், தானே எடுத்துப் பாதுகாக்கவும் இயலாதவனாய்த் தன் கண்ணெதிரிலேயே வெண்ணெய்த் திரள் உருகி ஓடுவதைப் பார்த்து வருந்திக் கிடக்கும் செயலற்ற, ஒரு கை இல் ஊமன்போல் நான் இருக்கிறேன். என் அறிவு மற்றும் உணர்வுகளால் இந்நோயை யான் ஆற்றவல்லேன் என்று தலைவன் தன் அடிமன அவலம் உரைப்பது நெஞ்சத்தை நெகிழ்விக்கிறது.

*இடிக்கும் கேளிர் நும்குறை ஆக*
*நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல*
*ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்*
*கையில் ஊமன் கண்ணில் காக்கும்*
*வெண்ணெய் உணங்கல் போலப்*
*பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே* (கு.தொ:58)

களவு, கற்பு எனும் இரு கைகோள்களிலும், பெரிதும் அவலங்களை எதிர்கொள்பவளாகவே தலைமகள், அக இலக்கியங்களில் சித்திரிக்கப்படுகிறாள். பெண்மை பற்றிய மதிப்பீடு, உரிமைக்குறைபாடு, கட்டுக் காவல்கள், ஆடவர்களின் கழிகாமம், பரத்தமைப் போக்கு, சமூகக் கட்டுப்பாடுகள், மரபுகள் என எல்லாப் புறமும் நெருக்கப்படும் இலக்கியத் தலைவிக்கு அவலங்களே எஞ்சி நிற்கின்றன. குறிஞ்சிக்கு உரிய கூடல் ஒன்றைத் தவிர பிரிவு, இருத்தல், இரங்கல், ஊடல் என்ற நான்குமே தலைவியின் அடிமன அவலச் சித்திரிப்புகளாகவே அமைகின்றன. ஔவையாரின், பாலைத் திணை பற்றி எழுந்த பாடல் ஒன்றில் வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது என்று துறை குறிக்கப்பட்டுள்ளது.

தலைவியைப் புணர்ந்து பிரிகிறான் தலைவன். அவன் விரைந்து வந்து மணக்காமையால் பிரிவு நோயில் தங்குகிறாள் தலைவி. தோழி பலவாறு ஆறுதல் கூறுகிறாள். தலைவி துயர் தீர்ந்த பாடில்லை. ஒருவர் துயரைப் பிறிது ஒருவர் முற்றாக ஏற்றல் இல்லை. தலைவி கண் விழித்துக் கலங்கி நின்ற காலை, தோழி சற்றே கண் அயர்ந்து விடுகிறாள். நற்றாய்,



www.saivamonline.com

செவிலி, தோழி என அனைவரும் உறங்கும் நிலையில், துன்பத்திற்குத் துணையாவார் எவரும் இல்லை என்ற அவலம் அடிமனத்திலிருந்து பிறக்கிறது. வார்த்தைகள் நெருப்புப் பிழம்புகளாக வெளிவருகின்றன.

வாடை ஒருபக்கம் என்னை வருத்துகிறது. எனக்கோ காமநோய் கரைகாணாது மிகுந்துள்ளது. என் காம நோய் அறிந்து வருந்தி, ஆறுதல் மொழியும் கூறாது உறங்கிக்கிடக்கும் இவ்வூரவரை, நான் என் துயர் உணர்த்தி எழுப்புவேனோ! அவர்களை மெய்யில் தாக்குவேனோ! அல்லது ஏதேனும் உரக்கக் கூவுவேனோ! நான் யாது செய்வது என்று தெரியாது அலமருகிறேன் என்கிறாள் தலைவி.

*முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்*
*ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு*
*ஆஅ ஒல்லெனக் கூவுவேன்கொல்*
***அலமரல் அசைவளி அலைப்ப என்***
***உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே!*** (கு.தொ:28)

மிக அழகிய, பெண்மைக் கோபம் எடுத்துரைக்கும் குறுந்தொகைப் பாடல்களுள் ஒன்று இது. ஒரு பெண்பாற் புலவரால்தான் இத்தகு பெண்ணின் அவலத்தை உணர முடியும் போலும்!

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்த, முல்லைத் திணைப் பாடல் ஒன்று குறுந்தொகைத் தொகுப்பில் உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தோழி, என் பிரிவுத்துயர் அறியாது பிரிந்தவர் ஒருநாள் இங்கு வரட்டும்! என் அவலத்தை வெளிப்படுத்துமாறு நீ, என்னுடைய மலர்கள் அணிந்த பொங்கித் தோன்றும் கூந்தலைத் தொட்டு அழகுறுத்த வேண்டா! என்னையும் தொட வேண்டாம் என்று கூறுவேன் பார் என்று சூளுரைக்கிறாள்.

*பொம்மல் ஓதியும் புனையல்*
*எம்மும் தொடால் என்குவெம் மன்னே*

இந்தச் சினம், தலைவன் வந்தவிடத்து நிலைத்து நிற்கப் போவது இல்லை! என்றாலும் பெண்மை பேதலிப்பில் ஓர் அளவுக்கு மேல் நிறுக்கலாற்றாது சினப்பதை இப்பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது.

நீ பல நாள் எடுத்துக் கூறியும் ஆற்றினாய் இல்லை. இவ்வாறு வருந்தியிருந்தல் நின் பெண்மைக்கு அழகன்று என்று தோழி இடித்துரைக்கிறாள். பிரிவுத் துயரால் விளைந்த அவலம் சொற்களிலே



www.saivamonline.com

வெடித்துச் சிதறுகிறது. ஔவையாரின் அழகிய சினவெளிப்பாட்டுக் கவிதை இது. நெய்தல் திணை சார்ந்து, இரங்கல் நிலை பேசி நிறைகிறது.

அவனை நினைத்தால், என் உள்ளம் வெந்து நையா நிற்கிறது. நினைக்காது இருந்துவிடலாம் என்றால் என் உள்ளம் என் வசம் நிற்க மறுக்கிறது. இக்காமம் என்னைப் பெரிதும் வருத்துவதோடு, கட்டுக்குள் அடங்காது வானளவு பரந்து விட்டிருக்கிறது. இத்தகு பிரிவு நோய் தந்த, என்னைப் புணர்ந்து அகன்று சென்ற எம் தலைவன், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய சான்றோர்க்குரிய பண்புகள் சிறிதும் இல்லாதவன்.

*உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது*
*இருப்பின் எம் அளவைத்து அன்றே வருத்தி*
*வான் தோய்வற்றே காமம்*
*சான்றோர் அல்லர் யாம் மரீஇ யோரே* (கு.தொ:102)

மன அவலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும், பெண்மைச் சீற்றம் இப்பாடலில் தலை தூக்கி நிற்கிறது.

தன் துயரில் பங்கேற்காது உறங்கும் தோழியைச் சினந்துரைக்கும் தலைவி நிலை பேசும் கொல்லன் அழிசியின் பாட்டு ஒன்றும், அடி மன அவலத்தைப் பதிவு செய்து நிற்கிறது.

*ஆனாத் துயரமொடு வருந்தி, பானாள்*
*துஞ்சாது உறைநரொடு உசாவாத்*
*துயில்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே!* (கு.தொ:145)

கவலையைப் பகிர்ந்து கொள்ள முன் வாராத, மனிதர்கள் வாழும் ஊரில் எவ்வாறு குடியேறி வாழ முடியும்? எனவே, இவ்வூர் வாழத் தகுதியற்றது. எவ்வளவு பெரிய பெண்மைச் சீற்றம் இது.

*உறைபதி அன்று இத்துறை கெழு சிறுகுடி*

என்ற முடிவுக்கு வருகிறாள் தலைவி. அடிமன அவல வெளிப்பாட்டில் இது ஓர் அரிய பதிவு. தலைமகளின் துயர் எடுத்து உரைக்கும் ஆலத்தூர் கிழாரின் பாடல் ஒன்று, நம்மைப்புருவம் உயர்த்த வைக்கிறது. காற்றுச் சுழன்று அடித்துச் சில மரக்கிளைகள் ஒடிந்து தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். கிளையின் கெட்டியாகிய உள் பகுதி முறிந்து விட்டிருக்கும். ஆனால், அதனைப் புறத்தே பற்றி நிற்கும் கனமான பட்டை, மரத்திலிருந்து கிளை வீழ்ந்து விடாது காத்து நிற்கும்.



www.saivamonline.com

யானை முதலிய விலங்குகளாலும் கிளைகள் இவ்வாறு ஒடிந்து தொங்குவது உண்டு.

வரைவு நீட்டித்துக் காலம் கழிக்கிறான் தலைவன். களவு விடுத்து, ஊரறியக் கற்பில் தங்க விரும்பும் தலைவி தலைவன் மெத்தனத்தால், மெல்ல மெல்ல நலன் இழக்கத் தொடங்குகிறாள். கண்ட ஊரார் சிறு மொழி பேசி அலர் தூற்றத் தொடங்குகின்றனர். உயிர் என்ற காவடித் தண்டில், ஒரு பக்கம் காமம், மற்றொரு பக்கம் நாணம். தோழி, ஊரார் அலர் தூற்றலுக்கு அஞ்சினால், என் காம நோய் மெலிந்து தேய்கிறது. ஏளனத்திற்கு அஞ்சிக் காமம் விட்டால், என் நாணம் அழிகிறது. என் தலைமகனால் முறிக்கப்பட்ட என் பெண்மை நலன், இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது காமமும், நாணமும் என்ற இரண்டின் சார்பில்தான். நான் என் செய்வேன் எனக் கூறும் தலைமகளின் அவலம் பேசி நிறைகிறது இப்பாடல்.

*கௌவை அஞ்சின் காமம் எய்க்கும்*
*எள்ளற விடினே, உள்ளது நாணே*
*பெருங்களிறு வாங்க முரிந்து நிலம்படாஅ*
*நாருடை ஒசியல் அற்றே*
*கண்டிசின் தோழி அவர் உண்டஎன் நலனே* (கு.தொ:112)

காமம், தலைவன் பால் நிகழும் விருப்பம் ஆதலின், அதனை விடுதல் கற்பு அழிதலோடு ஒக்கும் எனக்கருதியே தலைவி, கௌவை அஞ்சின் காமம் எய்க்கும் என்று கூறினாள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

காதல் வயப்பட்ட பெண்களுக்குத் தலைவன் பிரிவில் உடல் மெலியும், மேனி பசக்கும், தோள்கள் நலமிழக்கும் என்பன இலக்கிய வழக்குகள். தலைமகள் கற்புக்கடம் பூண்டமை அறியாது, மகளின் மாற்றம் குறித்துச் செவிலியும், நற்றாயும் வருந்துகின்றனர். தலைவன், குறிஞ்சி நிலத்துக் கடவுளர் முன்னாகப் பிரியேன் எனச் சூளுரைத்துப்பின் பிரிந்தான். தலைமகள் வாட்டமுற்ற நிலையிலும் அடிமன அவலங்களை மறைத்துக் கொண்டு, தலைவன் சூளுரைத்த தெய்வத்திற்குப் பராய்க் கடன் செலுத்தச் செல்கிறாள். அன்பு நெஞ்சம், சூளுரை தப்பிய தலைமகனைத் தெய்வம் தண்டித்து விடுமோ என அஞ்சுகிறது. எம் நிறம் பசந்ததும், உடல் நெகிழ்ந்ததும், தோள்கள் சாம்பியதும் தன்னியல்பால் நிகழ்ந்தனவே. இம்மெலிவுகளுக்கு எம் தலைவர் காரணமல்லர். அவர் கொடியவரும் அல்லர். தெய்வமே! நீ கொடியவர்களைத் தண்டிப்பாய்



www.saivamonline.com

எனக் கூறக் கேட்டேன்! என் தலைவன் கொடியன் அல்லன் என்று அன்பு நெஞ்சம் தலைவனைத் தாங்கிக் காக்கமுனைகிறது. கபிலரின் அழகிய பாடல் இது.

*மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்*
*கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்*
*கொடியர் அல்லர் எம் குன்று கெழு நாடர்*
*பசைஇப் பசந்தன்று நுதலே*
*ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே!* (கு.தொ:87)

மன அவலங்களை மறைத்துக் காதலனைக் காக்கும் பெண்மைப் பண்பு இங்கே சிறந்து நிற்கிறது.

***யானாகியர் நின் மனைவியை என்னாது , யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே என்று உரைத்த அருமைப்பாட்டில், மனைவி என்று இடம் பெறுவதைவிட அவன் அன்பைப் பெறுதலே தன் விருப்பம் என்று குறித்து அவன் அன்பின்மையை உணரவைக்கிறாள்.***

அம்மூவன் கவிதை ஒன்று குறுந்தொகையில் அமரத் தன்மை பெற்று வாழ்கிறது; அரிய பாடல். காதலித்து மணந்த தலைமகன் ,கற்பில், அன்பு மறந்து பரத்தைபால் செல்கிறான். தலைவி உடைந்து போகிறாள். இல்லற நெறி நிற்பாளாய், யாவற்றையும் பொறுத்தாற்றும் பண்பினள் அவள். தலைவன் பரத்தை மாட்டுப் பிரிந்தவழி ஆற்றாமை மிக்கவள், தலைவன், மீண்டும் இல்லம் திரும்பியதும் அவ்வாற்றாமை நீங்குகிறாள். படுக்கை அறையில் உரையாடல் நிகழ்கிறது. நீ யாது ஒன்றை என்பால் விரும்புகிறாய் எனத் தலைவன் வினாவினான். தலைமகள், ஐய! இப்பிறப்பு நீங்கி, மறு பிறப்பு வாய்க்கினும் நீயே என் கணவனாதல் வேண்டும் என்றாள். தலைவன் மகிழ்ந்தான். அடிமன அவலங்களை ஆழப்புதைத்தவளாய், அடுத்த பிறவியில் நானே நின் மனைவியாக வேண்டும் என்று கூற வேண்டியவள், அதனை விடுத்து உன்னால் விரும்பப்படுபவளாகப் பிறத்தல் வேண்டும் என்று நிறைவிக்கிறாள். ஆயிரம் எண்ணங்களைத் தலைவி உரை, தலைவன் உள்ளத்தில் தோற்றியிருக்க வேண்டும். யானாகியர் நின் மனைவியை என்னாது , யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே என்று உரைத்த அருமைப்பாட்டில், மனைவி என்று இடம் பெறுவதைவிட அவன் அன்பைப் பெறுதலே தன் விருப்பம் என்று குறித்து அவன் அன்பின்மையை உணரவைக்கிறாள்.



www.saivamonline.com

*அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து*
*மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப*
*இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீயாகியர் என் கணவனை*
*யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே* (கு.தொ:49)

கனல் தெறிக்கும் சினத்தின் உச்சியில் நின்று தோழி பேசும் , சுரம் செல்யானை என்று தொடங்கும் பாடல், வெள்ளி வீதியாருக்குச் சொந்தமானது. மருதத் திணையில், உரை கூறுவோர், கற்புக் காலத்துத் தெளிவிடை விலக்கியது என்று குறித்துப் போந்தனர். தோழி வரைவு கடாயதூஉம் என்றும் துறை கண்டனர். இரண்டும் பொருத்தமானதே!

களிற்று யானைகள் மதம் மிக்குச் சென்று, தம் கோடுகளை மலைப் பாறைகளின் மேல் குத்தி முறித்துக் கொள்வது உண்டு. பாணர்கள் சுடப்படாத பச்சை மண் கலயங்களில் மீனை இட்டு வைத்துப் பயன்கொள்வர். மீன் எடுக்கப் பெற்றுப் பன்னாள், பல முறை தூய்மை செய்த பின்னரும் மண்பாத்திரத்தில் மீனின் நாற்றம் அகலாது, வேறு ஒன்றுக்கும் பயன்படாதவாறு அப்பாத்திரத்தை மதிப்பிழக்கச் செய்யும். தெரிந்த இந்த உலகியலை மேற்கோள்காட்டித் தோழி பரத்தமையுள் தங்கிய தலைவனைச் சினந்து, தலைவி வருத்தத்தையும் தனதாக்கிக் கொண்டு ஒன்றி நின்று அவனைச் சாடுகிறாள்.

களவுக் காலத்தில் உன்னைக் கண்டு சிரித்த எம் பற்கள், யானையின் தந்தங்கள் போல் நொறுங்கக் கடவதாகட்டும். நீ தொட்டமையால் பசுமண் கலம் போல் பயனிழந்த யாம், எம் உயிராலும் அருவருக்கத்தக்கவர்களாக ஆயினோம். எவ்வளவு அழகிய ஒப்பீடுகள்!

*சுரம்செல் யானைக்கல் உறு கோட்டின்*
*தெற்றென இரீஇயரோ ஐய மற்றுயாம்*
*நும்மொடு நக்க வால்வெள் எயிரே*
*பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல*
*எமக்கும் பெரும்புலவு ஆகி*
*நும்மும் பெறேஎம் இறீஇயர் எம்உயிரே* (கு.தொ:169)

எம் உயிர் இற்று அழிவதாக என்ற தொடரில் காணும் பெண்மைச் சீற்றம், நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இவ்வாறே செவிலி கூற்றாக வரும் பாடல்களும் உள. வெற்றிமிக்க கவிதைகள், அவலங்களில் பிறப்பவையே என்ற இலக்கியப் போக்கிற்கு, மேற்குறித்த பாடல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன.



www.saivamonline.com